செய்தி வெளியீடு எண் : 559 நாள்: 08.04.2022

# தென்னை விவசாயிகள் உற்பத்தி செய்யும் கொப்பரைத் தேங்காயை அரசே விவசாயிகளிடமிருந்து நேரடியாக கொள்முதல் செய்து வருவது தொடர்பான செய்தி வெளியீடு

தமிழ்நாட்டில் கடந்த சில மாதங்களுக்கு முன்னால், கொப்பரை விலை மிகவும் குறைந்திருந்த காரணத்தினால், தென்னை விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்தில், விலை ஆதரவு திட்டத்தின் கீழ் பந்து கொப்பரை, அரவை கொப்பரைகளை விவசாயிகளிடமிருந்து நேரடியாக குறைந்தபட்ச ஆதரவு விலையில் கொள்முதல் செய்திட, தமிழ்நாடு அரசு நடவடிக்கை எடுத்து, அதற்கான ஒப்பதலினையும் ஒன்றிய அரசிடமிருந்து பெற்றுள்ளது.

அதன்படி, தமிழகத்தில் தென்னை அதிக அளவில் சாகுபடி செய்யப்படும் கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு, தஞ்சாவூர், திண்டுக்கல், கன்னியாகுமரி, வேலூர், சேலம், கிருஷ்ணகிரி, புதுக்கோட்டை, மதுரை, தேனி, விருதுநகர், தூத்துக்குடி, திருநெல்வேலி, நாமக்கல், தருமபுரி, திருவாரூர், நாகபட்டினம், இராமநாதபுரம் மற்றும் சிவகங்கை ஆகிய 21 மாவட்டங்களிலுள்ள 42 ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் கொப்பரைத் தேங்காய் கொள்முதல் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

தற்போது கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு மாவட்டங்களில், கொப்பரைத் தேங்காய் விலை குறைந்தபட்ச ஆதரவு விலையினைவிட குறைந்துள்ளது. இத்தருணத்தில் மாநில அரசு எடுத்துவரும் முயற்சியினை நன்கு பயன்படுத்தி, விவசாயிகள் தங்கள் பகுதியிலுள்ள ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களை அணுகி, ஒன்றிய அரசு அறிவித்த குறைந்த பட்ச ஆதரவு விலையான பந்து கொப்பரைக்கு கிலோவுக்கு ரூ.110/-ம், அரவை கொப்பரைக்கு கிலோவுக்கு ரூ.105.90/-ம் பெறலாம்.

எனவே, கொப்பரைத் தேங்காய் உற்பத்தி செய்யும் விவசாயிகள் தங்களது சிட்டா, அடங்கல், ஆதார் அட்டை மற்றும் வங்கி கணக்குப் புத்தக நகல்களுடன் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் பதிவு செய்து பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். அரசு நிர்ணயித்துள்ள தரத்தில் கொப்பரை தேங்காய்கள் விவசாயிகளிடமிருந்து நேரடியான கொள்முதல் செய்யப்படும் என்பதால், நன்கு உலர வைத்து, சுத்தமான கொப்பரைகளை தரம்பிரித்து கொள்முதலுக்கு கொண்டு வருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

கொப்பரைத் தேங்காய்க்கான தொகை விவசாயிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாக தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம் மூலம் அனுப்பி வைக்கப்படும் என்பதால், மாநில அரசு எடுத்துள்ள இந்த கொப்பரைத் தேங்காய் கொள்முதல் திட்டத்தில் கொப்பரைத் தேங்காய் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள தென்னை விவசாயிகள் அனைவரும் இணைந்து பயனடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in